[1975 நவம்பர் 10

திருநெல்வேலி மாவட்ட அரிசன நலப் பணிக்கு நிதி ஒதுக்கீடு

*274 வினா—**திரு. எம். முத்தையா:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திற்கு அரிசன நலத்துறைக்கென ஒதுக்கப்பட்ட 1973-74-ம் ஆண்டுக்கான நிதி செலவு செய்யப்பட்டதா?

(இ) இல்லை எனில், அதற்கான காரணம் யாது?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) ஆம். ஏறக்குறைய முழுவதும் செலவு செய்யப்பட்டுள்ளது.

(இ) இடமில்லை.

அன்னவரம் அரிசனக் குடியிருப்பு

*275 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி வட்டம், அன்னவரம் அரிசனக் காலனிக்கு குடிநீர் வழங்குவதற்கான திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) ஆம்.

(இ) இன்னும் ஒரு மாதத்தில் வேலை முடிந்து விடும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த அன்னவரம் காலனியில் இருக்கிற அரிசன மக்கள், மிகவும் பிற்பட்ட நிலையில் இருக்கிறார்கள். ஒரு மாதத்தில் முடிந்து விடும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எல்லாத் தெருக்களுக்கும் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, அந்தக் குறிப்பு இல்லை. அன்னவரம் காலனிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் எப்போது முடிவடையும் என்று கேள்வி. அதற்கு ஒரு

1975 நவம்பர் 10]

மாதத்தில் முடிந்து விடும் என்று மாவட்ட ஆட்சியாளர் பதில் தந்து இருக்கிறார். மேற்கொண்டு குறிப்பு, ஏதும் இங்கே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிக்கை அளித்தல்

சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் எட்டாவது அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் (திரு. நா. கணபதி): தலைவரவர்களே, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் எட்டாவது (ஐந்தாம் சட்டமன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.

(3) தகவல் கோரல்

(அ) எல்.ஐ.சி. கட்டடத்தில் ஏற்பட்ட தீ விபத்து சம்பந்தமான விசாரணை குறித்து.

THIRU K. T. K. TANGAMANI: Sir, Yesterday, news appeared in the Press about the statement of the I.G. of Police about the fire that broke out in the L.I.C. building. The House has not been informed about the cause of the fire and the steps taken for investigating it. We would like to know whether the Government would be in a position to tell this House, about the type of investigation which is going on and the details of the fire accident?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்.ஐ.சி. விபத்தைப்பற்றி அரசாங்கத் தரப்பில் அறிக்கை ஏதேனும் தர இருக்கிறார்களா என்று கேட்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: எல்.ஐ.சி.யில் ஏற்பட்ட விபத்து குறித்து இன்வெஸ்டிகேஷன் நடப்பதாக ஐ.ஜி. அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள். அது சம்பந்தமான விசாரணையை மத்திய அரசாங்கம் செய்கிறதா, மாநில அரசாங்கம்